தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 மே 2003

பதிப்புத்துறை: நூற்காட்சி, சிறப்புத்தள்ளுபடி நூல் விற்பனை

தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தில் பதிப்புத்துறையின் சார்பில் நூற்காட்சி மற்றும் 50 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி விற்பனைத் தொடக்கவிழா 10-04-2003 அன்று மாலை 5-00 மணியளவில் அரண்மனை வளாகக் கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர்(பொறுப்பு) திரு இரா.ஜெயக்குமார் அவர்களின் வரவேற்புரையுடன் இவ்விழா தொடங்கியது. ஆட்சிக்குழு உறுப்பினர்கள் திரு மீ.இராமதாசு அவர்களும், முனைவர் து.சீனிச்சாமி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையுரையில், ‘‘நூல் ஒரு மனிதனை முழுமையாக்கி, பண்பாடுள்ளவனாக மாற்றும். திருவள்ளுவர் நூலை, பண்பாடுடையவர் தொடர்பு எனக் கூறுகிறார்.

பாறை, செப்பு, பனை ஓலை, தாள், அச்சு ஊடகம் என வளர்ச்சி பெற்று இன்று கணினி ஊடகத்தில் நூல்கள் வெளியிடப்படுகின்றன. டிஜிட்டல் நூலகம் என்ற புதிய முறையும் இன்று உருவாகியுள்ளது. வடிவம் எவ்வாறு மாறினாலும் நூல் தொகுப்புகள் தேவையாக உள்ளன.

அக் காலங்களில் கோயில்களில் சரஸ்வதி பண்டாரங்கள் என்ற பெயரில் நூலகங்கள் இருந்தன.

சமண சமயத்தவர் நூல்களைப் போற்றிப் பாதுகாத்தனர். பல இலக்கியங்களைச் சமண சமயப் பெண்களிடத்துப் பெற்றதாக உவேசா கூறியுள்ளார். சீவக சிந்தாமணியில் பலவற்றின் பொருள்களை அவர்கள் மூலமாக விளங்கிக் கொண்டதாகவும் உ.வே.சா. கூறுவார். மூன்று தானங்களில் ஒன்றாக சாஸ்திர தானத்தைச் சமணர்கள் கைக்கொண்டனர்.

வீட்டுக்கு ஒரு புத்தகசாலை வேண்டும் எனப் பாரதிதாசன் கூறினார்.

நூலகத்துக்கு வரி வசூலித்த முதல் மாநிலம் தமிழகமாகும்.

திருக்குறளுக்கு ஆங்கில மொழியில் மட்டும் 40 மொழிபெயர்ப்புகள் உள்ளன. 36 உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

எனவே நூல், மொழியின் தொன்மையை, பண்பாட்டைக் காட்டுகிறது. ஒவ்வொரு நூலும் ஒவ்வொருவரின் சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளது’’ என்றார்.

பதிப்புத்துறை உதவிப்பதிவாளர் திரு செ.பழனியப்பன் அவர்களின் நன்றியுரையுடன் இவ்விழா இனிதே நிறைவுற்றது.

-பதிப்புத்துறை

10-04-2004 அன்று தொடங்கப்பட்டு 31-05-2003இல் முடிவடைந்த இச்சிறப்புத் தள்ளுபடி விற்பனையில் ரூ. 2,67,983/- மதிப்புள்ள நூல்கள் விற்பனை செய்யப்பட்டன

டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

தமிழ்ப் பல்கலைக்கழக இந்திய மொழிகள் பள்ளியின் சார்பில் 03-04-2003 அன்று வியாழன் முற்பகல் 11-00 மணிக்கு டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அறக்கட்டளைச் சொற்பொழிவு நடைபெற்றது. இச்சொற்பொழிவு நிகழ்ச்சியில் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிப்புலத் தலைவர் முனைவர் து.சீனிச்சாமி அவர்கள் தலைமையில் திருச்சி, பிசப் ஈபர் கல்லூரித் தமிழ்த் துறை இணைப்பேராசிரியர் முனைவர் இந்திரா மனுவேல் அவர்கள் ''சங்க இலக்கியமும் பிற்கால அக மரபும்'' என்னும் பொருண்மையில் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆற்றினார்கள். அவர்தம் உரையில், ''சங்க இலக்கியத்திற்கு முன்னோடியாக அமையும் தொல்காப்பியம் அகம் பற்றிய ஒருங்கிணைந்த கோட்பாட்டை வழங்குகிறது. திணைக்கோட்பாடு, கைகோள் கோட்பாடு, கூற்றுக்கோட்பாடு என்ற மூவகைகளில் அது தரும் கோட்பாடுகளை அணுகலாம்.

சங்க இலக்கியம் பெரும்பாலும் தொல்காப்பியக் கோட்பாடுகளைத் தொடர்கிறது. புதிய பொருட் கூறுகளைத் தோற்றுவிக்கின்றது.

சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் அகப்பாடல்கள் தனிப்பாடல்களாக அமைந்த நிலையைக் காட்டுகின்றன. பிற்காலத்தில் அகப்பாடல்களை வரிசை முறைப்படி தொடர்கதை போல அமைக்கும் நிலை உருவாகி கோவை இலக்கியமாக உருவெடுக்கின்றது.

தொல்காப்பியம் சங்க இலக்கியம் காட்டும் நெறி நம்பியகப்பொருள் நூல்களால் தொடரப்படுகின்றது. இவை காட்டும் கோட்பாடு ஒரு தனி சிந்தனைப்பள்ளியாக உருவெடுக்கின்றது. அகத்திணையில் எழுதிணைக்கோட்பாடு, களவுக்கும் கற்புக்கும் இடையேயான பிரிவுக்கோட்பாட்டை திருமணமாகக் காணுதல்; இயற்கைப்புணர்ச்சியைத் தலைவியின் எய்தும் புணர்ச்சியாகக் காணுதல்; இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம் என்ற இரண்டனையும் ஏற்றுக்கொள்ளுதல்; உடன்போக்கைத் தொடர் நிகழ்ச்சியாகக் காணுதல் போன்றவை இதன் சிறப்பம்சங்கள்.

இறையனாரகப்பொருள் உரையில் இதற்கு நேர்மாறான ஓர் சிந்தனைப்பள்ளி உருவாகின்றது. அன்பின் ஐந்திணையை மட்டும் காணுதல், கைக்கிளைக்கு இன்றியமையாமை தராமை, இயற்கைப்புணர்ச்சியில் புணர்ந்தபின் சொல் உண்டு என்றல், இடந்தலைப்பாடு - பாங்கற் கூட்டம் என்பவற்றில் ஒன்றை மட்டும் ஏற்றுக் கொள்ளுதல் போன்றவை இதன் தனிக் கூறுகள். இது களவியற்காரிகை, தமிழ் நெறி விளக்கம் என்பவற்றால் தொடரப்படுகின்றது.

இத்தகைய சிந்தனை மாற்றங்கள் சீவகசிந்தாமணி, பெருங்கதை போன்ற இலக்கியங்களில் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

இந்த சிந்தனைப்பள்ளி இலக்கிய வளர்ச்சியாகவே நின்று விடுகின்றது.

நம்பியகப்பொருள் சார்ந்த இலக்கணங்கள் காட்டும் கொள்கைப்பள்ளி தஞ்சைவாணன் கோவை நூற்களில் இலக்கிய உருவாக்கம் பெறுகின்றது.

பக்தி இலக்கிய மரபு சங்க இலக்கியத்தில் உள்ள வாய்ப்பான துறைகளைத் தேர்ந்து கொள்கிறது. சங்க இலக்கியத்தில் தலைவிக்கு உரியவைகளாக இருந்தவைகள் இங்குத் தலைவனுக்கரியவை ஆகின்றன.

திணைக் கோட்பாட்டைத் தற்கால இலக்கியங்களில் பொருத்தும் நிலை முனைவர் ஐயப்பப் பணிக்கரால் செய்யப்பட்டுள்ளது. சிறுகதைக்குப் பொருத்தும் முயற்சியை முனைவர் சீனிச்சாமியின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொண்டுள்ளனர். இது முழுநிலையில் பொருத்தப் படமுடியுமா? அகம் என்ற இலக்கிய வகைக்கு எழுதப்பட்ட இலக்கண வகைமுறை எவ்வெந் நிலைகளில் பிற்காலத்திற்குப் பொருத்தப்பட இயலும் எவை மாற்றப்படவேண்டும் என்பது ஆய்விற்குரியது.

சங்க அகமரபிற்குப் பின்வருபவை அகமரபைச் சாரா. அவை திரிபுகள் என்றும் அகம் என்ற இலக்கிய வகைக்குள் அடக்கப்படக்கூடாது என்ற கருத்தும் சிலரால் முன்வைக்கப்படுகின்றன. தலைவன் பெயர் சுட்டப்படாநிலையை அடிப்படை வரைவு நிலையாகக் கொண்டுள்ள அகமரபில் இதனைப் பின்பற்றி வரும் கோவை இலக்கியத்தையும் தனிப்பாடலையும் அகமரபின் தொடர்ச்சியன்று என்பது பொருந்தாது. பாட்டுடைத்தலைவனே களவித் தலைவனாக அமையும் பக்தி இலக்கியப்பாடல்கள், கலம்பகப் பாடல்கள், முத்தொள்ளாயிரப் பாடல்கள் போன்றவற்றிலும் அகமரபின் பொருட்கூறுகள் தொடரப்படும்போது அவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்'' எனக் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் இவ்வறக்கட்டளையை நிறுவிய டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார் அவர்களின் குடும்பத்தினர், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்விநிலைப் பணியாளர்கள், அலுவல்நிலைப் பணியாளர்கள், ஆய்வாளர்கள், ஆய்வு மாணவ மாணவிகள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவரையும் இந்திய மொழிகள் பள்ளியின் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் வே.சா.அருள்ராஜ் அவர்கள் வரவேற்க முனைவர் இரா.முரளிதரன் அவர்கள் நன்றி கூற நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

-இந்திய மொழிகள் பள்ளி

மொழிபெயர்ப்புத் துறை: பாரதிதாசன் அறக்கட்டளைக் கருத்தரங்கு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறையில் பாரதிதாசன் அறக்கட்டளைக் கருத்தரங்கம் 28, 29-04-03 ஆகிய இரு நாட்களில் நடைபெற்றது. இவ்வறக்கட்டளைக் கருத்தரங்கின் தொடக்க விழா 28-04-2003 அன்று முற்பகல் 10-30மணிக்கு மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. மொழிபெயர்ப்புத்துறையின் பேராசிரியர் முனைவர் ச. இராதாகிருட்டிணன் அவர்கள் வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தரவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள். துணைவேந்தர் தம் தலைமையுரையில், கருத்தரங்கத் தொடக்கவுரையாற்றவுள்ள கவிஞர், பேராசிரியர் இரா. பாலச்சந்திரன் நல்ல கவிஞர், படைப்பாளி, ஆற்றல் மிக்க திறனாய்வாளர், என்று அறிமுகப்படுத்திய பின்னர் பாரதிதாசனின் சமுதாயச் சிந்தனைகளை விளக்கிக் கூறினார். 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று தமிழைப்பற்றிப் பாடி, உணர்வூட்டியவர் பாரதிதாசன்; பாரதிதாசன் தனக்கென்று ஒரு கவிஞர் குழாமை ஏற்படுத்தியவர்; நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் எனப் பாடியவர் பார்திதாசன். உழைப்பாளியின் வியர்வையைப்பற்றி புதியநோக்கில் பாடியவர், கைம்பெண் பற்றிப் பாரதிதாசன் தன் குயில் இதழில் எழுதியதைச் சுட்டிக் காட்டி, பாரதிதாசன் சமுதாயச் சிந்தனை மிகுந்தவர், மொழியுணர்வு ஊட்டியவர், அரிய கவிஞர் என்றார்.

> “ 'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று தமிழைப்பற்றிப் பாடி, உணர்வூட்டியவர் பாரதிதாசன் ”
>
> -துணைவேந்தர்

திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறைப் பேராசிரியர் முனைவர் இரா.பாலச்சந்திரன் அவர்கள் தொடக்கவுரையில் ''பாரதிதாசனைச் சமுதாய நோக்கில் ஆய்வு செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவருடைய கவிதையியலைப் புரிந்து கொள்ள முடியும். பாரதிதாசன் 20ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராக விளங்கினார். அறிவு, உணர்வு இரண்டையும் இணைந்து வழங்கியவர் பாரதிதாசன். எளிய நடையின் மூலம் தமிழின் மேன்மையை உணர்த்த முடியும் என்று நம்பினார். கவிதை என்பது 'எழுத்து அல்ல, பேச்சு' என்ற கருத்து அவருக்கு உடன்பாடானது. அவரது இயற்கைப் பாடல்களையும், காதல் பாடல்களையும் மறுவாசிப்புக்கு உள்ளாக்க வேண்டும். பல பாடுபொருள்களைக் காணும்போது பாரதிதாசன் கனகசுப்புரத்தினமாகவே இருக்கிறார். பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்கள் பாரதிதாசனை ஈர்த்தன. அரசியல் பின்னணியில் பாரதிதாசன் கவிதைகள் புரட்சியை ஏற்படுத்தின'' என்று கூறினார்.

முன்னதாக 1999ஆம் ஆண்டு நடைபெற்ற பாரதிதாசன் அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலைத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் வெளியிட அதனைப் பேராசிரியர் கி.அரங்கன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

வரவேற்கிறோம்

தமிழ்ப் பல்கலைக்கழகத்திலிருந்து புதிய பொலிவுடன் வெளிவரவிருக்கும் தமிழ்க்கலை, Tamil Civilization ஆகிய இதழ்களுக்கு ஆய்வுக் கட்டுரைகள், மதிப்புரைக்கு நூல்கள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகளையும் நூல்களையும் இரண்டு படிகள் இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 001 என்ற முகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகிறோம்.

இ.அ.ப. மட்டும் நூலஞ்சல்

திரு. நிர்வாக அலுவலர் அவர்கள்
சரஸ்வதி மஹால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

மொழிபெயர்ப்புத்துறை

பாரதிதாசன் அறக்கட்டளைக் கருத்தரங்கின் நிறைவு விழா 29-04-2003 அன்று பிற்பகல் 3-30 மணிக்கு மொழிப்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கு நடைபெற்ற இரு நாட்களிலும் 50-க்கும் மேற்பட்ட கல்லூரி/ பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலந்து கொண்டு பல்வேறு தலைப்புகளில் கட்டுரை வழங்கினர். இந்நிறைவு விழாவில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள். அவர் தம் உரையில் "கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவிஞர். மனித சமுதாயத்தின் மேம்பட்ட வாழ்க்கைக்கு அவர் படைப்புகள் பெரிதும் உதவக்கூடியன. மரபுநெறி சார்ந்த கவிதையில் மானுடம் இருக்கும். புதுக்கவிதை முதல் சென்ரியூ கவிதை வரை பல்வேறு வகையான கவிதைகளை எழுதக்கூடியவர்" என்று கூறினார். அண்மையில் லிமர்க்கூ கவிதையையும் தமிழில் படைத்துள்ளார்.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் நிறைவுரை ஆற்றினார். தனது உரையில் "பாரதிதாசன் பாடல்களை மற்றவர்கள் பாடும்போது அவர் அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைவார். பாரதிதாசனைப்பற்றி முந்நூறுக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. பாரதிதாசன் உயிரோடு இருந்தபோது வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும், விமானத்தில் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டார். அது நிறைவேறவில்லை. ஆனால் அவரது கவிதைகள் வெளிநாடுகள் செல்கின்றன. தற்போது பாரதிதாசன் பெயரில் பல்வேறு விருதுகள், சாலைகள், பல்கலைக்கழகம் போன்றவை உள்ளன. மக்களைப் புரட்சிப் பாதையில் கொண்டுவரப் பாரதிதாசன் கவிதை பாடினார். அதனால் தந்தை பெரியாருக்கு இவரைப் பிடித்தது. அவர் பணத்திற்காகக் கவிதை எழுதவில்லை. இயக்கத்திற்காகக் கவிதை எழுதினார். இந்திய தேசீயத்திற்கு முதல் கவிஞர் பாரதி. தமிழ்நாட்டின் முதல் அரசியல் கவிஞர் பாரதிதாசன். மானுட சமுதாயத்திற்காகப் பாடுபட்ட கவிஞர்" என்று கூறினார்.

கருத்தரங்க நிறைவு விழாவில் வளர்தமிழ்ப்புலத் தலைவர் முனைவர் அரோமா குளோரி சாம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்